பொது பாடத்திட்டத்தால்

பல்கலைக்கழக அதிகாரங்களில் எந்த பாதிப்பும் இல்லை!

அமைச்சர் பொன்முடி தகவல்

சென்னை, ஜூலை 23-

பொதுப் பாடத்திட்டம் கொண்டு வரப்படுவதால் பல்கலைக்கழகங்களின் அதிகாரங்களில் எந்தவித பாதிப்பும் இல்லை என்று உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

சென்னை, மாநில பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஒரே மாதிரியான பொது பாடத்திட்டம் கொண்டு வருவது தொடர்பாக, பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பதிவாளர்கள், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டத்தை சென்னை கிண்டி அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உயர்கல்வித்துறை ஏற்பாடு செய்து இருந்தது.

கூட்டத்தில் மாநில பல்கலைக்கழகங்களில் பொதுப் பாடத்திட்டம் கொண்டு வரப்பட்ட விவகாரம், கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நிகழ்வுகள், காலிப்பணியிடங்கள் குறித்த விவகாரம் உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்து சுமார் 2 மணி நேரத்துக்கு மேலாக ஆலோசனை நடந்தது.

ஆலோசனை முடிவில் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி நிருபர்களிடம் கூறியதாவது:

பொது பாடத்திட்டங்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, பேச்சு, கட்டுரை, வினாடிவினா, கவிதை உள்பட போட்டிகளை கல்லூரி, பல்கலைக்கழகம் மற்றும் மாநில அளவில் நடத்தி பரிசுகள் வழங்கத் திட்டமிட்டுள்ளோம். அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தமிழ், ஆங்கிலம் பாடங்களுக்கு 100 சதவீதம் ஒரே மாதிரியான பாடத்திட்டங்களும், மற்ற பாடங்களுக்கு 75 சதவீத பாடத்திட்டங்களும் உருவாக்கப்படும், மற்ற பாடங்களுக்கான மீதமுள்ள 25 சதவீதம் அந்தந்த பல்கலைக்கழகங்களின் பாடவாரியங்கள் (போர்டு ஆப் ஸ்டடிஸ்) முடிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, பொது பாடத்திட்டங்கள் ஒரு மாதத்துக்கு முன்பு அனைத்து துணைவேந்தர்களின் ஒத்துழைப்போடு முடிவு செய்யப்பட்டு, அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டது. சில இடங்களில் புதிய படிப்புகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த படிப்புகளுக்கு அடுத்தாண்டு முதல் புதிய பாடத்திட்டங்கள் கொண்டு வரப்படும்.

பாதிப்பு இல்லை

கிட்டதட்ட 90 சதவீதம் புதிய பாடத்திட்டங்கள் அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு, இந்த ஆண்டு முதல் பொது பாடத்திட்டமாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த பொது பாடத்திட்டத்தால் பல்கலைக்கழகங்கள், பாடவாரியங்களின் அதிகாரங்களில் எந்த பாதிப்பும் இல்லை. அவர்களோடு ஆலோசித்து தான் இந்த பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு கல்லூரியில் இருந்து மற்றொரு கல்லூரிக்கு படிக்க செல்லும் மாணவர்களுக்கும், ஒரு

கல்லூரியில் பணிபுரிந்து மற்றொரு கல்லூரிக்கு இடமாறுதல் செல்லும் பேராசிரியர்களுக்கும் பாடத்திட்டங்கள் எளிதாக இருக்கும். பொது பாடத்திட்டம் 2023 24ம் கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளில் அமல்படுத்தப்பட்டுவிடும். கூடுதலாக கொண்டுவரப்படும் புதிய படிப்புகள் இந்த ஆண்டு புதிய பாடத்திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, அவர்களுக்கு 2024-25ம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்படும். கவுரவ விரிவுரையாளர்கள் ஊதியம் பொது பாடத்திட்டங்களை சிலர் எதிர்க்கிறார்கள். பலர் ஆதரிக்கிறார்கள். பல்கலைக்கழக தலைவர்கள், திறமை வாய்ந்த துறை நிபுணர்களை அழைத்துதான் பொது பாடத்திட்டம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. காலத்துக்கு ஏற்ப பாடத்திட்டங்கள் மாற்றப்பட வேண்டும். வளர்ச்சிக்கு ஏற்ப இந்த பொதுப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் எந்த பிரச்சினையும் இல்லை. எதிர்ப்பு தெரிவிக்கும் தன்னாட்சி கல்லூரிகளையும் அழைத்து பிரச்சினைகள் குறித்து பேசுவோம். பேராசிரியர் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். மேலும் கவுரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்வதற்கும் குழு அமைக்கப்பட உள்ளன. கவுரவ விரிவுரை யாளர்கள் ஊதிய பிரச்சினை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. அவர்களின் ஊதியம் ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாக உயர்த்த முதல் அமைச்சர் அனுமதி அளித்துள்ளார். மாநில கல்விக் கொள்கைக்குழு தயாராகி வருகிறது. அதுவும் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் நடைமுறை ப்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார். அமலாக்கத்துறை சோதனையை சட்ட ரீதியாக சந்திப்போம் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, மாநில பல்கலைக்கழக துணை வேந்தர்களுடன் ஆலோசனை நடத்தி முடித்த பிறகு நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போதுநிருபர்கள், 'அமலாக்கத்துறை சோதனை யில் உங்களிடம் இருந்து பணத்தை அதிகாரிகள் முடக்கம் செய்தது உண்மையா? உயர்கல்வித் துறையில் உங்கள் செயல்பாட்டை முடக்க அமலாக்கத்துறை சோதனை நடத்தப்படுகிறதா?' என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், 'இது நாங்கள் பார்க்காதது இல்லை. முதல் அமைச்சரே சொல்லியிருக்கிறார். எதுவாக இருந்தாலும் சட்டரீதியாக சந்திக்க வேண்டிய இடத்தில் சந்திப்போம்' என்றார்.

மாநிலங்களவை அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில்

ஒருமித்த முடிவு எடுக்காத அவைத் தலைவரைக் கண்டித்து வெளிநடப்பு!

மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா விளக்கம்!

புதுடெல்லி, ஜூலை 23-

மாநிலங்களவை அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் ஒருமித்த கருத்துடன் முடிவுகள் எடுக்கப்படாமல் அவைத் தலைவர் நடந்து கொள்வதைக் கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் வெளிநடப்பு செய்ததாக மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா தெரிவித்தார்.

இது குறித்து வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியது வருமாறு: நாடாளுமன்றத்தின் மழைக்காலக்கூட்டத்தொடரின் முதல் நாளான ஜூலை 20 ஆம் தேதி மாநிலங்களவையில் முதல் விவகாரமாக கொளுந்து விட்டு எரியும் மணிப்பூர் விவகாரத்தை எடுத்துக் கொள்ளவலியுறுத்தினோம். அவையை ஒத்திவைத்து விட்டு இந்த விவகாரம் குறித்து பேச நோட்டீஸும் கொடுத்திருந்தோம். குறிப்பாக, இந்த மாநிலம் குறித்து கருத்துத் தெரிவிக்காமல் இருக்கும் பிரதமர் மோடி, அவையில் அறிக்கை கொடுக்கலாம். அதனடிப்படையில் மணிப்பூர் மாநில விவாதத்தை அவையில் நடத்தலாம் என்று பல எதிர்க்கட்சிகளும் நோட்டீஸ் கொடுத்து கேட்டுக் கொண்டது. பிற்பகலில் அவை கூடும் போதும், எதிர்க்கட் சித் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே இது குறித்து பேச முற் பட்டார். ஆனால், ஆளும் கட்சியினர் இடையூறு செய்து தடுத்தனர்.

மணிப்பூரில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். கற்பனை செய்ய முடியாத அளவிற்கு வன்முறை நடந்துள்ளது. தற்போது வன்கொடுமைகள் அதிகமாகியிருக்கின்றன.

ஆனால், ஆளும் பா.ஜ.க. கட்சி தரப்பில் பிரதமர் அறிக்கை கொடுக்க வேண்டியதை பற்றிக் கூறாமல் 'உடனடியாக விவாதிக்கலாம்' என்றனர். இதற்கு நாங்கள் உடன்படவில்லை. இதே போன்று தமிழக ஆளுநர்குறித்து விவாதிக்கவும் நோட்டீஸ் கொடுத்தோம். ஆனால், அவைத் தலைவர் நாங்கள் கொடுத்த ஒத்திவைப்பு தீர்மானங்களைப் பற்றி பேச வாய்ப்பளிக்காமல் அவையை ஒத்தி வைத்தார்.

முன்னதாக, நிகழ் நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடரில் மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியவை குறித்து இன்றைய தினம் அலுவல் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அடுத்து நடைபெற வேண்டிய பணிகள் குறித்து நேரம் ஒதுக்கவே இங்கு முடிவுகள் எடுக்கப்படும். இதன் படி முதல் மசோதா தில்லி அரசு சம்பந்தப்பட்ட அவசரச்சட்டம். டெல்லி அரசின் உரிமையைப் பறிக்கும் அவசரச் சட்டம் ஒன்றிய அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக மசோதா கொண்டு வர முயற்சிக்கப்பட்டது. இந்த விவகாரம் குறித்து தற்போது உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விசாரிக்கப்படுவதால், இதை நாடாளுமன்றத்தில் விவாதிக்க கூடாது. இதற்கான விதியும் இருப்பதால் இந்த மசோதாவை அறிமுக ப்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டோம்.

ஆனால், இந்த மசோதாவை எடுத்துக் கொள்வதற்கு நேரம் ஒதுக்க அவைத் தலைவர் ஜகதீப் தன்கர். அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் நேரத்தை ஒதுக்க சம்மதித்தாலே அந்த மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அர்த்தம்.

இதனால், நாங்கள் இசைவு தெரிவிக்கவில்லை. பா.ஜ.க. தலைவர்களைத் தவிர அனைத்துக் கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆனால், அவைத் தலைவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி ஒத்துக் கொள்ள வலியுறுத்தினர்.

அடுத்து வனப் பாதுகாப்பு குறித்த மசோதாவிற்கும் நேரம் ஒதுக்க அவைத் தலைவர் கோரினார்.

மிக முக்கியமான இந்த மசோதா குறித்து கூட்டுநாடாளு மன்றக் குழு விவாதித்துள்ளது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதைப் படித்த பின்னர் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாள் தள்ளி வையுங்கள் என்று கேட்டோம். இப்படி எல்லாவற்றிலும் முரண்பாடுகளுடன் கூடிய அலுவல் ஆய்வுக் கூட்டமாக இருந்தது. நாங்கள் கொடுக்கும் கருத்துக்களையும் யோசனைகளையும் கேட்பதில்லை. ஒருமித்த கருத்து வராமல் ஒருதலைபட்சமாக முடிவுகள் எடுக்கப்படுகின்ற இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் எந்த பயனுமில்லை என்று கூறி 'இந்தியா' என்கிற அமைப்பில் இருக்கின்ற எல்லா எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு செய்துவிட்டோம்.

அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இதற்கு முன்பு வெளிநடப்பு என்பது நடைபெற்றது இல்லை. காரணம், கூட்டத்தை நடத்துபவர்கள் எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நடைபெற்று வந்தது. ஒத்திவைத்து மாற்றங்கள் செய்து ஜனநாயகமாக செயல்பட்டார்கள். ஆனால், தற்போது நாங்கள் சொல்வதுதான் சரி எனக் கூறி எங்களை 'புல்டோசர்' செய்ய வெளிநடப்பு செய் தோம். ஆனால், வெளியே எதிர்க்கட்சிகள் குறித்து தவறான கருத்து பரப்பப்படுகிறது. மணிப்பூர் விவகாரத்திற்கு பெயருக்கு விவாதம் நடத்த ஒத்துக்கொள்ள மாட்டோம். ஒன்றிய அமைச்சர்கள் அல்ல. பிரதமர் அவைக்கு வந்து அறிக்கை அளிக்கும் பட்சத்திலே இது குறித்து விவாதிக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்றார் திருச்சி சிவா.

மருத்துவம் படித்த முதல் இந்தியப் பெண் - சமூகப் போராளி

முத்துலட்சுமி ரெட்டி நினைவுநாள் இன்று ஜூலை 22!

சென்னை மாகாணச் சட்டசபையில் பங்குபெற்ற முதல் பெண். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் புனித நம்பிக்கையாக இருக்கும் அடையாறு புற்றுநோய் நிறுவனத்தை உருவாக்கியவர். அபலைப் பெண்களின் வாழ்க்கைக்கு அடைக்கலமாக ஓர் இல்லம் வேண்டும் என்று 'அவ்வை இல்லம்' தொடங்கியவர். அவர்தான், 'ஒரு தெய்வம் நேரில் வந்தது' என்று சொல்லத் தக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார். தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் இயற்ற தொடர்ந்து பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டார்.

இருதார தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், பால்ய விவாகங்கள் தடைச் சட்டம், ஏழைப்பெண்களுக்கு இலவசக் கல்வி ஆகிய புரட்சிகரமான சட்டங்களைக் கொண்டு வந்து அவற்றை நிறைவேற்றினார்.

ஈடிணையற்ற சமூக சேவைகளுக்காக பத்மபூஷண் விருது உட்பட பல விருதுகளும், கவுரவங்களும் பெற்றார். மகத்தான சமூக சேவகியும், தலைசிறந்த மருத்துவரும், பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட வருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, 1968ல் 82ம் வயதில் மறைந்தார்.

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்தது மணிப்பூர்!

ஒன்றிய அரசைக் கண்டித்து

தூத்துக்குடி வடக்கு - தெற்கு மகளிரணி சார்பில் ஆர்ப்பாட்டம்! ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்!

மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் பி.கீதாஜீவன் - அனிதா ராதாகிருஷ்ணன் கூட்டறிக்கை!

தூத்துக்குடி, ஜூலை 23-

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்தது மணிப்பூர் ! தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் நாளை (24.07.2023) தூத்துக்குடி வி.வி.டி. மெயின்ரோடு டூவிபுரம் 5 வது தெரு சந்திப்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் திருமதி. பி.கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களின் அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப் படுத்தப்பட்டு வீதியில் ஊர் வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப்பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளன. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. பெண்களை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிருக்கெதிரான இக்கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.

மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலேயே தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கண்டனத்தையும், கவலையையும் சமூக ஊடக வாயிலாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சைப் பதற வைக்கும் சம்பவம் மே4ல் நடந்தது. தற்போது தான் இந்தியாவின் பிற பகுதிகளுக்கு தெரிய வருகிறது. மானபங்கப்படுத்தப்பட்ட ஒரு பெண்ணின் சகோதரரும், தந்தையும் அடித்தே கொல்லப்பட்டுள்ளனர். மற்றொரு பெண் இராணுவ வீரரின் மனைவி ஆவார். இக்கொடுமையைக் கண்டித்து நாளை (24.07.2023 திங்கட்கிழமை) காலை 10.00 மணி அளவில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

தி.மு.க. தலைமைக் கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் நாளை (24.07.2023 திங்கட்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி வி.வி.டி. மெயின்ரோடு - டூவிபுரம் 5 வது தெரு - அண்ணாநகர் 7 வது தெரு சந்திப்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார். தூத்துக்குடி மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன் தலைமையில், மாநில மகளிரணி பிரச்சாரக் குழுச்செயலாளர் திருமதி. ஜெசிபொன்ராணி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி. கவிதாதேவி, தூத்துக் குடி தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி. சாரதா, தூத்துக்குடி வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி. ராமலெட்சுமி, தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி.ஆரோக்கியமேரி, ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி கழக அளவிலான மகளிரணி மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பெண் பிரதிநிதிகள், மகளிரணி உறுப்பினர்கள், பொதுவான பெண்கள் அணைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் பங்கேற்பீர்!

தென்காசி பேருந்து நிலையம் அருகில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் பொ.சிவபத்மநாதன் - ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தென்காசி, ஜூலை 23-

மணிப்பூர் கொடூரங்களை தடுக்க தவறிய ஒன்றிய அரசை கண்டித்து நாளை (24.07.2023) காலை 10 மணிக்கு தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் மகளிர் அணியினர், மகளிர்

தொண்டர் அணியினர், மகளிர், பொதுமக்கள் திறளாக கலந்து கொள்ள வேண்டும். என தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ. சிவ பத்மநாதன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக அவர்கள் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பா.ஜ.க ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க அரசு கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய நிலையில் சமீபத்தில் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதிகளில் ஊர்வலமாக இழுத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதர வைத்துள்ள தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க அரசு தடுக்க தவறி வேடிக்கை பார்த்து கொண்டிருந்தது.

இக்கலவரம் நிகழ்ந்த நேரத்தில் அனைத்து தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க அரசும் மகளிர்க்கு எதிரான கொடுமைகளை தடுக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள தவறியது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் மணிப்பூர் சம்பவம் நடைபெற்ற உடனே தனது உண்மையான கண்டனத்தை சமூக வலைத்தளங்கள் மூலம் பதிவிட்டு தன்னுடைய வலுவான கண்டனத்தை பதிந்துள்ளார்கள். தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்த மணிப்பூர். தடுக்க தவறிய ஒன்றிய அரசை கண்டித்து நாளை (24.07.2023 திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி வடக்கு மாவட்டம், தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு காலை 10 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை வார்டுகளில் அனைத்து பகுதிகளிலும் உள்ள மகளிர் அணி, தொண்டர் அணி, மகளிர் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு வன்மையாக கண்டனத்தை தெரிவிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மணிப்பூர்: தடுக்கத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

தி.மு.க. மகளிர் அணி சார்பில் தேனி பழைய பஸ் ஸ்டாண்ட் அருகில் ஆர்ப்பாட்டம்!

வடக்கு மாவட்ட செயலாளர், தங்க தமிழ்ச்செல்வன் அறிக்கை!

தேனி, ஜூலை 23-

தேனி வடக்கு மாவட்ட கழக மாவட்டச்செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப்படுத்த தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப் படுத்தப்பட்டு வீதியில் ஊர் வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப்பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக ஊடக செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிர்க்கெதிரான இக் கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.

மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலே தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி அவர்கள், தனது கண்டனத்தையும், கவலையையும் சமூக ஊடக வாயிலாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சைப் பதற வைக்கும் இக்கொடுமையைக் கண்டித்து நாளை (24/7/2023 திங்கட்கிழமை) காலை 10.00 மணி அளவில் தேனி வடக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு கண்டனத்தை தெரிவிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் கேட்டுக்கொண்டுள்ளார்.